## 4. இரண்டு உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற்றம்— பேரவைத் தலைவர் தீர்ப்பில் விளக்கம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலை திரு. இளம்வழுதி, இங்கே பேரவை விதி 56-ன் கீழ் நான் ஒரு முடிவெடுத்து அறிவித்ததற்குப் பிறகு, அதன்மீது வேறு எவ்வகையிலும் விவாதத்தை எழுப்ப முடியாது என்று தெளிவாக இருந்தும் கூட, பிரச்சினை முடிந்து என்னுடைய முடிவை அறிவித்ததற்குப் பிறகு, நான் அதில் பேசியே ஆகவேண்டும் என்று பிடிவாதம் பிடித்து, நான் உட்காரச் சொல்லி, பலமுறை சொல்லியும் அப்போதும் உட்காராமல், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததற்குப் பிறகும் அமர மறுத்து, பேரவையின் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து குந்தகம் விளைவித்துக் கொண்டிருந்த காரணத்தால் நான் அவரை அவையை விட்டு வெளியேற உத்தரவிட்டேன். வெளியேற மறுத்ததற்குப் பிறகு காவலர்களை அனுப்பி அவரை அப்புறப்படுத்தவேண்டி இருந்தது. நான் அந்த நேரத்தில் அவர் இரண்டாவது முறையாக இவ்வாறு வெளியேற்றப்படுகிற காரணத்தால் இந்த எஞ்சிய கூட்டத்தொடர் முழுமைக்கும் அவர் வர முடியாது என்று அறிவித்து இருந்தேன். நான் இவ்வாறு இரண்டாவது முறை காவலர்களை வைத்து அவரை வெளியேற்றினேன் என்று பொருள்கொண்டு-திரு. பழனிசாமி அவர்களும், திரு. தம்புசாமி அவர்களும் அதுபற்றிக் கேட்கிறீர்கள் என்று நினைக்கிறேன்- (குறுக்கீடுகள்) முன்பு காவலர்களை அனுப்பி அவரை அப்புறப்படுத்தவில்லை. அது இதுதான் முதல் முறை. ஆனால் நீங்கள் வெளியேறவேண்டும் என்று நான் சில நேரங்களில் சொன்ன போது, அவராக, வெளியே போய் இருக்கிறார்.

எனவே காவலர்களை அனுப்பி, உள்ளே இருந்து அவரை அப்புறப்படுத்தியது என்பது இதுதான் முதல் முறை, ஆனால் நம்முடைய விதிகளின்படி நான் அவரை வெளியேற வேண்டும் என்று -to withdraw from the House- இரண்டுமுறை அவ்வாறு சொல்லிவிட்டால் பேரவை விதி 120-ன்கீழ் எஞ்சிய கூட்டத் தொடருக்கு அவர் வர முடியாது என்று இருக்கிறது. இருந்தாலும் காவலர்களை வைத்து அப்புறப்படுத்தியது இதுதான் முதல் முறை என்கிற காரணத்தினால் அவர் இன்று மட்டும் அவையை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார் என்று என்னுடைய தீர்ப்பைத் திருத்திக்கொள்கிறேன்.

ஆனால் இது முறை என்று நீங்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது. விதி 121 இருக்கிறது. அவர் நடந்துகொண்டிருக்கிற முறைக்கு-தொடர்ந்து இதே முறையிலேதான்—அவருக்கு ஒவ்வொரு முறையும் நான் பேசுவதற்கு

அனுமதி அளிக்கிறேன். பேசி முடித்ததற்குப் பிறகு, பதில் சொல்லி, நான் தீர்ப்புச் சொன்னதற்குப் பிறகு, சென்ற வெள்ளிக்கிழமையும் அதேபோல்தான் செய்தார். நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்று பல முறை எச்சரித்த பிறகுதான் உட்கார்ந்தார். 121-ன் படி உடனடியாகப் பேரவை முன்னவர்—பேரவை முன்னவர்தான் சொன்னார்- அவர்மீது நடவடிக்கை எடுங்கள் என்று பேரவை முன்னவரே கூட சொன்னதற்குப் பிறகு, 121-ன் கீழ் எஞ்சிய கூட்டத் தொடருக்கு, பேரவை முன்னவர் அவர்கள் இப்போது ஒரு தீர்மானம் கொண்டுவருவார்களேயானால், நான் அவரை வெளியேற்ற முடியும். 120-ன் கீழ் நான் தெரிவித்த காரணத்தால் - அது காவலர்களை வைத்து வெளியேற்றியது. 120-ன் கீழ் இப்போதும் முடியும். இருந்தாலும்-நீங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, காவலர்களை வைத்து வெளியேற்றியது இதுதான் முதல் முறை என்கிற காரணத்தால் இன்று மட்டும் அவர் வரக்கூடாது என்று என்னுடைய தீர்ப்பை மாற்றிக்கொள்கிறேன்.

அடுத்து திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் இன்றைக்கு அவையை விட்டு வெளியேறுமாறு நான் உத்தரவிட்டு அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார். இதேபோல் 30-3-94 அன்றும் இதே முறையில் அந்த உறுப்பினரும், ஏனைய உறுப்பினர்களோடு சேர்ந்து வெளியேற்றப்பட்டார். இரண்டு முறை அவர் அவையை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கிற காரணத்தால் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் பேரவை விதி 120-ன் படி கூட்டத்தின் எஞ்சிய நாட்களுக்கு அவையிலிருந்து தள்ளிவைக்கப்படுகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

## 5. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 35– பாசனம்.

(ஆ) கோரிக்கை எண்3–பொதுப் பணிகள்—கட்டிடங்கள்

(இ) கோரிக்கை எண் 37— பொதுப் பணிகள்-பணியாளரமைப்பும் கருவிகளும், தளவாடமும்.

(ஈ) கோரிக்கை எண் 38-சாலைகளும் பாலங்களும்

(உ) கோரிக்கை எண். 54—பாசனம் குறித்த மூலதனச் செலவு